## அறநிலையத்துறையை கபளீகரம் செய்யத் துடிக்கும் பா.ஜ.க.விடமிருந்து – துறையைக் காக்கும் முதல் தளகர்த்தராக அமைச்சர் பி.கே.சேகர்பாபு விளங்குகிறார்!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் - தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல; இந்தியாவிற்கே நம்பிக்கையாகத் திகழ்கிறார்!

## ‘இந்திய ஜனநாயக மீட்பு இயக்கம்’ சார்பில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னெடுப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் - டாக்டர் பொன்ராஜ் புகழாரம் !



சென்னை, செப்.24-

**இந்திய ஜனநாயக மீட்பு இயக்கம் (IDRM) சார்பில், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு முன்னெடுப்பில் நடைபெற்ற இளைஞர்கள் கருத்தரங்கில், முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் அவர்களின் அறிவியல் ஆலோசகர் டாக்டர் பொன்ராஜ் வெள்ளைச்சாமி, “தமிழ்நாட்டை முதலீட்டில் வளர்ச்சிப் பாதையில் நடைபோட வைப்பவர் யார்?” எனும் தலைப்பில் பேசுகையில், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல; இந்தியாவிற்கே நம்பிக்கையாகத் திகழ்கிறார் என்று குறிப்பிட்டார்.**

**இக்கருத்தரங்கில் அவர் ஆற்றிய சிறப்புரை வருமாறு :-**

“காஞ்சியிலே ஒரு புத்தன் பிறந்தான்
கொண்ட கருணையினால்
எங்கள் நெஞ்சில் நிறைந்தான்
அண்ணாவென்றே எல்லோரும் அழைக்க வந்தான்
ஆயிரம் தலைமுறை தழைக்க வந்தான்
அண்ணா... அண்ணா... அண்ணா...
எங்கள் அன்பின் தெய்வம் அண்ணா!”

பேரறிஞர் அண்ணா தமிழ்நாட்டின் அடையாளம். பேரறிஞர் அண்ணா, மெட்ராஸ் மாநிலத்தை தமிழ்நாடு என்று மாற்றியவரே அவர்தான். ஒட்டுமொத்த இந்தியாவும் ஒட்டுமொத்த உலகமும் வியந்து போற்றிய ஒரு பேரறிஞராக அண்ணா அவர்கள் நமக்கெல்லாம் திகழ்ந்தார்கள்.

அவரது 117வது பிறந்தநாள் அன்று இந்தச் சிறப்பான இளைஞர்கள் கருத்தரங்கத்தை இந்திய ஜனநாயக மீட்பு இயக்கத்தின் சார்பில் நடத்துவதற்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து ஒத்துழைப்பு கொடுத்த தமிழ்நாட்டின் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ஐயா சேகர்பாபு அவர்களுக்கு எனது வணக்கங்கள், வாழ்த்துகள்!

தலைப்பு: ”தமிழ்நாட்டை முதலீட்டில் வளர்ச்சிப் பாதையில் நடைபோட வைத்தவர் யார்? சரி, அதனால் எங்களுக்கு என்ன லாபம்? என்று நீங்கள் எல்லாம் கேட்பீர்கள். அதற்கான விடைதான் இந்தக் கருத்தரங்கம்; இந்த உரை.

### ‘ப்ளூ வேல்’ விளையாட்டு!

உங்களில் எத்தனை பேருக்கு ‘ப்ளூ வேல்’ கேம் தெரியும். இதை ரஷ்யாவில் 2016இல் பிலிப் புடேய்கின் என்ற 21 வயது சைக்காலஜி மாணவன் உருவாக்கினான். அதனை சமூக வலைதளங்களில் தொடக்கத்தில் யாருக்கும் தீங்கு விளைவிக்காத சவால் என்று சொல்லி பரப்பி, 50 நாட்களில் உங்களுக்கு ஒவ்வொரு சவாலாக கொடுத்துக் கொண்டே இருப்பான். 50 நாட்கள் நீங்கள் செய்தீர்கள் என்றால், 50வது நாள் நீங்கள் முக்தி அடையலாம் என்று உங்களுக்கு ஒரு சவால் கொடுத்து விடுவான்.

சமூக வலைதளங்களில் நீங்கள் எதை உபயோகப்படுத்துகிறீர்களோ, அதில் உங்களுக்கு ஒரு லிங்க் வரும். அந்த லிங்கை கிளிக் செய்தவுடன், உங்கள் மொபைல் போனில் இருக்கும் புகைப்படங்கள், ஆடியோ, வீடியோ அனைத்தும் அவனுக்கு சென்று விடும். உங்களுடைய செல்ஃபி, தனிப்பட்ட புகைப்படங்களை எடுத்து, நான் சொல்வதைக் கேட்கவில்லை என்றால் இதை வெளியிடுவேன் என்று மிரட்டுவான். அய்யய்யோ தெரியாமல் மாட்டிக்கொண்டோமோ என்று சொல்லி, நீங்கள் சொல்வதை நான் கேட்கிறேன் என்று சொல்வார்கள். முதலில் இன்றைக்கு இரவு ஒரு மணிக்கு அல்லது இரண்டு மணிக்கு ஒரு படம் பாருங்கள் என்று சொல்வான். படம் தானே பார்க்க சொல்கிறானே பார்ப்போம் என்று பார்ப்பார்கள். காலையில் 4 மணிக்கு எழுந்து காற்று வாங்குங்கள்; உடற்பயிற்சி, யோகா செய்யுங்கள் என்று வரிசையாக சொல்லிக் கொண்டிருப்பான். உங்கள் மூளையை மாற்றி மாற்றி மாற்றி இறுதியாக 50வது நாளில் ஒரு நிலைக்கு கொண்டு வந்து, நீங்கள் தற்கொலை செய்து கொண்டு இறந்து விட வேண்டும் என்று சொல்வான். இவ்வாறு தற்கொலை செய்து இறந்தவர்கள் மட்டும் 1,500 பேர். இந்தியா, பிரேசில், அமெரிக்கா, நியூசிலாந்து உள்ளிட்ட பல நாடுகளில். கேரளாவிலும் தமிழ்நாட்டிலும் சில பேர் இறந்திருக்கிறார்கள். இந்தியாவிலும் அதிகமான பதிவு செய்யப்பட்ட வழக்குகள்.

இது பெரிய செய்தியாக பரவியவுடன், ரஷ்யா காவல்துறை இதை யார் செய்தது என்று தேடிக் கண்டுபிடித்து அந்த சைக்காலஜி மாணவனை கைது செய்து அழைத்து வந்து விசாரிக்கிறார்கள். அவ்வாறு விசாரிக்கும் போது அவன் சொன்னான், “நான் செய்வது தெய்வீகப் பணி என்றான்.” ஒரு கேமை உருவாக்கி 1,500 பேரை கொன்றிருக்கிறாய். நீ செய்வது தெய்வீகப் பணியா? என்று காவல்துறை கேட்டார்கள். “நான் அனைவருக்கும் அனுப்புவதில்லையே. எவன் அதிகமாக மொபைல் போனில் அடிமையாக இருக்கிறானோ; எவன் தன்னம்பிக்கை இல்லாமல் இருக்கிறானோ; எவன் காதல் தோல்வி என்று மூலையில் உட்கார்ந்து அழுகிறானோ; எவன் சமூகவலைதளத்தில் அடிமையாக இருக்கிறானோ; எவன் சினிமாவில் அடிமையாக இருக்கிறானோ; எவன் தன்னம்பிக்கை இழந்து தாடி வளர்த்து திரிகிறானோ; இவனையெல்லாம் பார்த்து லிங்க் அனுப்புகிறேன். நான் அனுப்பிய லிங்கை அவன் கிளிக் செய்ய வேண்டும் என்று அவசியம் இல்லை. அவ்வாறு கிளிக் செய்து உள்ளே வந்தால் அவன் பயாலஜிக்கல் வேஸ்ட். அந்த பயாலஜிக்கல் வேஸ்ட்ஐ இந்த பூமியின் பாரத்தைக் குறைப்பதற்கு ஐம்பதே நாட்களில் காலி செய்து மேலே அனுப்புவதுதான் தெய்வம் எனக்கு இட்ட கட்டளை என்றான்.

### பயாலஜிகல் வேஸ்ட்!

நண்பர்களே... இளைஞர்களே... மாணவ – மாணவிகளே... உங்கள் பெற்றோர்கள் கனவுடன் லட்சியத்துடன் உங்களைத் வளர்த்தெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்த லட்சியத்தை மறந்து, பகட்டிற்கும் படாடோபத்திற்கும், ஆடம்பரத்திற்கும், பிரம்மாண்டத்தைப் பார்த்து மயங்கி உங்களை நீங்கள் இழந்தீர்கள் என்று சொன்னால், நீங்கள் தனித்துவமானவன் / தனித்துவமானவள் அல்ல; நீங்கள் பயாலஜிக்கல் வேஸ்ட் என்று ஒருவன் கிளம்பி1,500 பேரை மேலே அனுப்பி இருக்கிறான் என்று சொன்னால், நன்றாக உணர்ந்து கொள்ளுங்கள், லட்சியம் கொண்ட எவனையும் யாரும் அடிமைப்படுத்த முடியாது. அந்த இலட்சியம் என்ற விதையை விதைத்தவர்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள்; அந்த இலட்சிய விதையை விதைத்தவர்தான் கலைஞர் அவர்கள்; அந்த இலட்சிய விதையை விதைத்தவர்தான் இன்றைய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்; அந்த இலட்சிய விதையை விதைத்தவர்தான் டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் அவர்கள்.

இலட்சியம் கொண்ட யாரையும் சினிமா அடிமைப்படுத்த முடியாது; சமூக வலைதளம் அடிமைப்படுத்த முடியாது; வீடியோ கேம்ஸ் அடிமைப்படுத்த முடியாது; நண்பர்கள் கூட அடிமைப்படுத்த முடியாது; காதல் அடிமைப்படுத்த முடியாது; காதல் வரவேண்டும். வரக்கூடாது என்று இல்லை. வரவேண்டிய வயதில் வர வேண்டும். ஆனால் அதற்கு நீங்கள் அடிமையாகி விடக்கூடாது. நம்மைச் சுற்றி அனைத்து தீமைகளும் உள்ளன. அனைத்து நன்மைகளும் உள்ளன. சாக்கடையை தாண்டத்தான் வேண்டுமேயொழிய சாக்கடையில் மூழ்கக் கூடாது. எது நல்லது? எது கெட்டது? என்பதை உணர்ந்து கொள்ள இளைஞர்களுக்கு பக்குவம் வேண்டும்; பகுத்தறிவு வேண்டும்; சிந்தனை வேண்டும். சிந்தனையற்ற மனிதன் விளக்கு வெளிச்சத்தை பார்த்து, அந்த வெளிச்சம் அருமையாக பிரகாசிக்கிறது என்று விளக்கு வெளிச்சத்தில் சென்று ஒட்டிக்கொண்டால், அதில் விட்டில் பூச்சிகளாக மறைந்துதான் போக வேண்டும். பிரம்மாண்டத்தைப் பார்த்து மயங்கிய எவனும் வாழ்ந்ததாக சரித்திரம் இல்லை.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள், நமக்கு பகுத்தறிவுச் சிந்தனையை விதைத்தார்; அண்ணா அவர்கள், ‘ஒன்றே குலம் ஒருவனே தேவன்’ என்று சொல்லி, அனைவரையும் உள்ளடக்கிய சமூகமாக மாற்றி அரசியல் வயப்படுத்தி மாபெரும் தலைவர்களை உருவாக்கினார்.

### எதிர்கால தலைமுறைக்கு மிகப்பெரிய வாய்ப்பு!

இன்றைய இளைஞர்களின்உலகம், பகட்டைப் பார்த்து ஆடம்பரத்தைப் பார்த்து சினிமாவைப் பார்த்து நடனத்தைப் பார்த்து, உங்கள் வாழ்க்கையையே ஒரு நடனமாக மாற்றி விட்டில் பூச்சிகளாக அழிந்துகொண்டிருக்கிறது. இதை மாற்ற வேண்டும் என்று அண்ணா விதைத்த விதை, திராவிட முன்னேற்றக் கழகமும் திராவிட மாடல் ஆட்சியும் உங்களுக்கான கனவுகளை நனவாக்குவதற்கு – அந்தக் கனவுகளுக்கு வடிவம் கொடுப்பதற்கு உங்களுக்கு லட்சியத்தை உருவாக்குவதற்குத் தான் தங்களது பொன்னான நேரத்தை செலவிட்டு எதிர்கால தலைமுறைக்கு ஒரு மிகப்பெரிய வாய்ப்புகளை உருவாக்கி கொடுத்திருக்கிறார்கள்.

**உங்கள் கனவுகளை இலட்சியமாக மாற்றி, அந்த இலட்சியத்தின் மூலமாக நீங்கள் வெற்றிப் படிக்கட்டைத் தொட வேண்டும். நான் தனித்துவமானவள் / தனித்துவமானவன் என்று நீங்கள் உணர்ந்த அடுத்த வினாடி, வரலாற்றில் உங்களுக்காக ஒரு பக்கம் ஒதுக்கப்பட்டுவிடும். அந்தப் பக்கத்தை வருங்கால சந்ததியைத் திரும்பத் திரும்ப படிக்க வைப்பது, உங்கள் இலட்சியத்தில் இருக்கிறது; உங்கள் கனவில் இருக்கிறது.**

ஒட்டு மொத்த இந்தியாவின் தனிநபர் வருமானம் வருடத்திற்கு 1.75 லட்சம் ரூபாய். தமிழ்நாட்டை ஆளும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் திராவிட மாடல் அரசில் தனிநபர் வருமானம் 3 லட்சம் ரூபாய். ஆனால் இலக்கு வருடத்திற்கு 8 லட்சம் ரூபாய். குறைந்தது மாதம் அறுபது ஆயிரம் ரூபாய் சம்பளம். இப்போது தனிநபர் வருமானம் முப்பதாயிரம் ரூபாய். மாதம் 60 ஆயிரம் ரூபாய் சம்பளத்தை வாங்குவதற்கு உரிய வாய்ப்புகளை ஒரு அரசு உருவாக்கிக் கொடுப்பதில், எந்த அரசு முன்னணியில் நிற்கிறது? எந்த அரசு அதற்கான செயல் திட்டங்களை முன்னெடுக்கிறது? அந்த அரசின் மூலமாக உங்கள் குடும்பம் உங்களது எதிர்காலம் உங்கள் குழந்தைகளின் எதிர்காலம் சிறக்குமா? இல்லை, விட்டில் பூச்சிகளாக நீங்கள் எடுக்கும் முடிவுகள் உங்கள் தலையெழுத்தை மாற்றி படுகுழியில் தள்ளுமா என்பதை நீங்கள் முடிவு எடுக்க வேண்டிய நேரம்.

நண்பர்களே... ஒரு சின்ன ஒப்பீடு. இந்தியாவிற்கும் சீனாவிற்கும் எந்தெந்தத்துறையில் வேலைவாய்ப்பு என்று பார்த்தீர்கள் என்றால், இந்தியாவில் ஒட்டு மொத்த வேலை செய்யும் தகுதி பெற்றவர்களில் 43.5 சதவீதம் பேர் விவசாயத்தில் இருக்கிறார்கள்; சீனாவில் 22.5 சதவீதம் தான். சீனாவில் நம்மில் பாதி பேர் தான் விவசாயத்தில் இருக்கிறார்கள். தொழில்துறையில், இந்தியாவில் 24 சதவீதம் பேர்தான் வேலை வாய்ப்பில் இருக்கிறார்கள்; சீனாவில் 32 சதவீதம் பேர் இருக்கிறார்கள். சேவைத்துறையில், இந்தியாவில் 33 சதவீதம் பேர்தான் இருக்கிறார்கள்; சீனாவில் 45 சதவீதம் பேர் இருக்கிறார்கள்.

இதில், சீனாவில் 22 சதவீதம் பேர்தான் விவசாயத்தில் இருக்கிறார்கள். அவர்களுடைய ஏற்றுமதி எவ்வளவு தெரியுமா? 100 பில்லியன் டாலர். இந்தியாவில் 43 சதவீதம் பேர் விவசாயத்தில் இருக்கிறார்கள். ஏற்றுமதி 43 பில்லியன் டாலர். எனவே, இந்தியாவில் அதிகமான பேர் வேலை பார்த்து உற்பத்தி இல்லை; ஆனால், சீனாவிற்கு சரிசமமாக இருக்கும் ஒரே நாடு தமிழ்நாடு மட்டும்தான். அரிசி உற்பத்தியில், சீனாவின் உற்பத்தி ஹெக்டேருக்கு ஆறு டன். இந்தியாவின் உற்பத்தி, ஹெக்டேருக்கு இரண்டு முதல் மூன்று டன். தமிழ்நாட்டின் உற்பத்தி, ஹெக்டேருக்கு ஆறு முதல் ஏழு டன். எஸ்.ஆர்.ஐ. முறையை கொண்டு வந்து, இந்தச் சாதனையை முதன் முதலில் படைத்தவர் கலைஞர் அவர்கள்தான். கரும்பு உற்பத்தியில், சீனாவிற்கு சரிசமமாக தமிழ்நாடு மட்டும்தான் இருக்கிறது. பீகார், உத்தரப்பிரதேசம் மற்றும் மத்திய பிரதேசம் உள்ளிட்ட அத்தனை மாநிலங்களும் உற்பத்தியில் ஹெக்டேருக்கு 80 டன் தான். தமிழ்நாடு மட்டும்தான் ஹெக்டேருக்கு 150 டன். எஸ்.எஸ்.ஐ. முறை.

இதை எல்லாம் பார்க்கும்போது, நீங்கள் பார்த்தீர்கள் என்றால், இந்தியாவிற்கு விவசாயத் துறையிலிருந்து 31 லட்சம் கோடி ரூபாய் வருகிறது. அதாவது, ஜி.டி.பி.இல் 18 சதவீதம். சீனா ஜி.டி.பி.இல் ஏழு சதவீதம் தான். அவர்களின் வருமானம் 1.2 ட்ரில்லியன் டாலர். கிட்டத்தட்ட 100 இலட்சம் கோடி. தமிழ்நாடு, விவசாய பங்களிப்பு 7.4 சதவீதம். தமிழ்நாட்டின் பங்களிப்பு 1.7 லட்சம் கோடி. இதையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கும் போதும், கிட்டத்தட்ட சீனாவிற்கு சரிசமமாக இருக்கும் ஒரே மாநிலம் தமிழ்நாடு மட்டும்தான்.

இது பாக்கெட் பாக்கெட்டாக இருக்கிறது. இந்தப் பாக்கெட்டை தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்த வேண்டும் என்ற நிலைமை வரும்போது, செயல்படுத்தும் தகுதியும் திறமையும் பெற்ற இந்த அரசு தொடருமானால், கண்டிப்பாக சீனாவிற்கு போட்டியாக இந்தியா அல்ல, தமிழ்நாடு வரும். அதற்கான அனைத்து வாய்ப்புகளும் தமிழ்நாட்டிற்குத்தான் இருக்கிறது.

இப்படிப்பட்ட ஒரு சூழலில், எப்படிப்பட்ட முதலீடுகளை சீனாவும் இந்தியாவும் கொண்டு வருகிறது என்று பார்த்தீர்கள் என்றால், மொத்த நிலையான மூலதன உருவாக்கம். மொத்த நிலையான மூலதன உருவாக்கம் என்றால், முறையான மூலதனத்தை உருவாக்கும் நாடு எதுவோ, அந்த நாடுதான் வளர்ச்சியில் அதிகமாக வரும்.

மொத்த நிலையான மூலதன உருவாக்கத்தில் சீனா என்ன செய்கிறது என்றால், கிட்டதட்ட ஜி.டி.பி.இல் 41 முதல் 43 சதவீதம். இந்தியா ஜி.டி.பி.இல்29 முதல் 31 சதவீதம்தான். இதில் இந்தியாவின் FDI வருடத்திற்கு 81 பில்லியன் டாலர். சீனாவின் FDI200 பில்லியன் டாலர். நம்மைவிட இரண்டு மடங்கு அதிகமாக இருக்கிறது. ஆனால் சீனாவின் பொருளாதாரம் எங்கிருக்கிறது? இந்தியாவின் பொருளாதாரம் எங்கிருக்கிறது?

இவ்வளவு முதலீடுகள் உள்ளே வருகிறது. அதை சீனா எதில் முதலீடு செய்கிறது? இந்தியா எதில் முதலீடு செய்கிறது? இந்தியாவுக்கு வரும் முதலீடுகளில் பெரும்பாலானற்றை சேவைத்துறையில் தான் முதலீடு செய்கிறார்கள். அதில் 19 சதவீதம் சீனாவின் முதலீடு உற்பத்தி உள்ளிட்டவற்றில்

கடந்த 10 ஆண்டுகளில் இந்தியாவிற்கு வரும் முதலீடுகளில் நரேந்திர மோடி ஜி அவர்கள், 20 லட்சம் கோடியை நான் உள்கட்டமைப்பிற்குத்தான் முதலீடு செய்தேன் என்றார். அந்த 20 லட்சம் கோடியில், வரிசையாக எத்தனை பாலங்கள் உடைந்து விழுந்தது என்று உங்களுக்கே தெரியும்; எத்தனை விமான நிலையங்களில் தண்ணீர் ஒழுகுகிறது, உடைந்து விழுந்தது என்று உங்களுக்கே தெரியும். அதுபோன்று, தமிழ்நாட்டில் ஒரு பாலம் உடைந்து விழுந்ததைக் காண்பியுங்கள். சென்னையில் எத்தனை பாலம் கட்டியிருக்கிறார்கள்... ஒரு பாலமாவது உடைந்து விழுந்திருக்கிறது என்று சொல்லுங்கள் பார்ப்போம். குஜராத்தில் கட்டிய அனைத்து பாலங்களும் உடைந்து விடுகிறது. ரயில் நிலையங்கள், விமான நிலையங்கள், கப்பல் தளங்களில் 20 லட்சம் கோடியை முதலீடு செய்து, அதில் எத்தனை லட்சம் கோடி உருப்படியாக இருக்கிறது. புதிதாக போடப்பட்ட சாலைகள் ஆறு மாதங்களில் ஒன்றும் இல்லாமல் ஆனவையாக இருக்கிறது. எனவே, இருபது லட்சம் கோடி எங்கே செல்கிறது? இவ்வளவிலும் மூலதன உருவாக்கம் நடக்கவில்லை. மூலதன உருவாக்கம் நடக்கவில்லை என்றால், பொருளாதாரம் வளராது. சீனாவிற்கு வரும் அத்தனை முதலீடுகளையும் உற்பத்தியில் முதலீடு செய்கிறான். ஒரே ஒரு வார்த்தை, 1980இல் இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பு 200 பில்லியன் டாலர்; சீனாவின் அந்நியச் செலாவணி கையிருப்பு நம்மில் பாதி கூட இல்லை. இன்றைக்கு இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பு 650 பில்லியன் டாலர்; ஆனால், சீனாவின் அந்நிய செலாவணி கையிருப்பு ஏழு ட்ரில்லியன் டாலர். 10 மடங்கு அதிகம். இது எதனால்? சீனா, வரும் முதலீடுகளை உற்பத்தியில் முதலீடு செய்தார்கள். அதாவது, ‘சீனாவில் உற்பத்தி செய்வோம், உலகமெங்கும் விற்பனை செய்வோம்’ என்றான். அதற்கான உற்பத்தி மையத்தை உருவாக்கினார்கள். உற்பத்தி வசதிகளை உருவாக்கினார்கள். அப்படிப்பட்ட ஒரு வாய்ப்பு உருவாகியதனால் இன்றைக்கு சீனா அமெரிக்காவிற்கு சவால்விடும் நாடாக, ‘நீ எத்தனை வரி விதித்தாலும் விதித்துக் கொள். அதை எதிர்த்து என்னால் சமாளிக்க முடியும்’ என்று சொல்லி அமெரிக்கா மீது வரி விதித்தவர்கள் சீனா.

### செயற்கை நுண்ணறிவால் வேலையிழப்பு!

இதை ஏன் நான் சொல்கிறேன் என்றால், இன்றைக்கு மிகப்பெரிய சவால் இந்த இளைஞர்களுக்கு காத்துக் கொண்டிருக்கிறது. இன்றைய சவால் அமெரிக்க அதிபர் விதித்த 50 சதவீத இறக்குமதி வரி. இதனால் என்ன பாதிப்பு? இது ஒன்று. இரண்டாவது பாதிப்பு, செயற்கை நுண்ணறிவு உள்ளிட்டவை இளைஞர்களின் வேலைவாய்ப்பை தட்டிப் பறிக்கும் ஒரு மிகப்பெரிய ஆபத்து காத்திருக்கிறது. அணுகுண்டால் ஏற்படும் ஆபத்தைவிட கொரோனா என்ற பயோ வார் ஏற்படுத்தும் ஆபத்தைவிட, இந்த செயற்கை நுண்ணறிவு ஏற்படுத்தும் வேலையிழப்பு மிகப்பெரிய ஆபத்தை ஏற்படுத்தும்.

அமெரிக்காவின் 50 சதவீத இறக்குமதி வரி விதிப்பால் எவ்வளவு பாதிப்பு ஏற்படுகிறது என்று நான் சொல்கிறேன். நீங்கள் நினைத்துப் பாருங்கள். ஜவுளி மற்றும் ஆயத்த ஆடை உற்பத்தித்துறையில் மட்டும், அமெரிக்காவின் 50 சதவீத இறக்குமதி வரிவிதிப்பால் இந்தியாவின் இழப்பு ஒரு லட்சத்து 27,550 கோடி ரூபாய்; தமிழ்நாட்டில் மட்டும் 21,250 கோடி ரூபாய்; ஒரு லட்சத்து 26 ஆயிரம் பேருக்கு வேலையிழப்பு. ஆகஸ்ட் 27இல் இருந்து அமலுக்கு வந்துவிட்டது. இங்கிருந்து ஏற்றுமதி ஆகும் அனைத்து கண்டெய்னர்களையும் திருப்பி அனுப்பி கொண்டிருக்கிறார்கள். திருப்பூருக்கு, சென்னைக்கு திரும்ப வந்து கொண்டிருக்கிறது.

தோல் மற்றும் காலணிகள் துறையில் மட்டும், ஒட்டு மொத்த இந்தியாவின் ஏற்றுமதி இழப்பு 25,500 கோடி ரூபாய்; தமிழ்நாட்டில் 7,650 கோடி ரூபாய். ஒட்டு மொத்த திருப்பூர் மட்டுமே 50 ஆயிரம் கோடிக்கு ஏற்றுமதி செய்கிறது. இந்த 50,000 கோடியில் 21,250 கோடி அவுட்.திருப்பூரில் ஒரு லட்சத்து 20ஆயிரம் பேருக்கு வேலையில்லை. ஒரு ஆளுக்கு வேலை இல்லை என்றால், அவர்களது குடும்பம் சேர்த்து நான்கு பேர் பாதிக்கப்படுகிறார்கள். பொறியியல் பொருட்கள் துறையில், இந்தியா முழுமைக்கும் 85 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு; தமிழ்நாட்டில் 8,500 கோடி ரூபாய் இழப்பு வரப்போகிறது. தங்க நகை செய்பவர்கள் உள்ளிட்ட துறையில், இந்தியா முழுவதும் 51 ஆயிரம் கோடி ரூபாய்; தமிழ்நாட்டில் 4,250 கோடி ரூபாய் இழப்பு. இதனால் கிட்டத்தட்ட 60 ஆயிரம் பேருக்கு வேலை இல்லாம் ஆகப்போகிறது. கடல் உணவுகள் உள்ளிட்ட துறையில், இந்தியா முழுவதும் 29,750 கோடி ரூபாய்; தமிழ்நாட்டில் 1,530 கோடி ரூபாய். இதில் வேலையிழப்பு கிட்டத்தட்ட ஒரு லட்சம் பேர்.

கோழி மற்றும் இறைச்சித் தொழில் துறையில் மட்டும், இந்தியா முழுவதும் 3,400 கோடி ரூபாய்; தமிழ்நாட்டில் 170 கோடி ரூபாய் இழப்பு.

விவசாயம் உள்ளிட்ட மற்ற துறைகளில், கிட்டத்தட்ட 85 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு; தமிழ்நாட்டில் மட்டும் 10,200 கோடி ரூபாய் இழப்பு.

இதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுங்கள் என்று பாரத பிரதமர் மோடி அவர்களுக்கு தமிழ்நாடு முதல்வர்கடிதம் எழுதி இருக்கிறார். இதுவரைக்கும் பதிலே இல்லை.

ஒட்டு மொத்தமாக அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யும் அளவு 6.8 லட்சம் கோடி ரூபாய். அதில் 3 லட்சத்து 82 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு இந்தியாவிற்கு ஏற்படுகிறது. அதில் தமிழ்நாட்டிற்கு 53,550 கோடி ரூபாய் இழப்பு ஏற்படப்போகிறது. எனவே, இத்தனை பேருக்கு வேலையில்லாமல் ஆகப்போகிறது. மோடி என்ன செய்திருக்கிறார்? இப்போதுதான் மணிப்பூருக்கு சென்றிருக்கிறார்.

நம்முடைய தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் எங்கு சென்றார்? ஜெர்மனிக்கும், UKவிற்கும் சென்றார்; ஓசூருக்கு சென்றார். முதலீடுகளைக் கொண்டு வந்தார்.

நண்பர்களே... இப்படிப்பட்ட நிலையில் இதனால் இந்தியா முழுமைக்கும் ஒட்டுமொத்தமாக கிட்டத்தட்ட 25 லட்சம் பேருக்கு வேலையிழப்பு ஏற்படப் போகிறது. ஒரு நபருக்கு நான்கு பேர் என்றால், கிட்டத்தட்ட ஒரு கோடி பேருக்கு வேலையிழப்பு ஏற்படப் போகிறது. தமிழ்நாட்டில் 14லட்சம் பேர் இதனால் பாதிக்கப்படப் போகிறார்கள். அதில் அதிகமாக இருப்பது, இளைஞர்கள்.

படிப்பது உங்கள் பொறுப்பு. உங்களை படிக்க வைப்பது பெற்றோரின் கடமையாக இருந்தாலும், உங்களை கல்லூரிக்கு கொண்டு வருவதற்கு அரசு 1,000 ரூபாய் கொடுத்துக் கொண்டிருக்கிறது; மகளிருக்கு இலவசமாக பேருந்து பயணம் அளித்துக் கொண்டிருக்கிறது.

மாணவர்களுக்கு ‘நான் முதல்வன்’ திட்டத்தைக் கொடுத்து, கிட்டத்தட்ட 40 லட்சம் பேருக்கு திறன் மேம்பாடு கொடுக்கும் ஒரே மாநிலம், தமிழ்நாடுதான். வேறு எந்த மாநிலமும் கிடையாது. இது முதல்வர் கனவில் உதித்த திட்டம். படித்தவர்கள் 60 முதல் 70 லட்சம் பேர் இருக்கிறார்கள்; அதில் 40 லட்சம் பேரை போக்கஸ் செய்து கொடுப்பது யார்? நான் முதல்வன் திட்டத்தில் தமிழ்நாடு முதல்வர் அவர்கள்.

செல்வி ஜெயலலிதா அவர்கள் 2016இல் ஆட்சி அமைக்கும் போது ‘தமிழ்நாடு விஷன் 2023’என்ற திட்டத்தை நான் அவர்களுக்கு கொடுத்தேன். அந்த விஷனில் நான் கொடுத்தது என்ன தெரியுமா? பத்து ஆண்டுகளில் 15 லட்சம் கோடி முதலீடாக உள்ளே கொண்டு வர வேண்டும் என்ற இலக்கை நிர்ணயித்து, தனிநபர் வருமானத்தை ஏழு லட்சமாக உயர்த்தி, இந்தக் கல்வி பிரமீடில் 7 லட்சம் பேர் இருக்கிறார்கள்; ஒரு கோடியே 20 லட்சம் பேர் பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பில் இடைநின்றவர்கள்; 60 லட்சம் பேர் பட்டதாரிகள்; 4 லட்சம் பேர் முதுநிலைப் பட்டதாரிகள் மற்றும் பிஹெச்.டி.

இந்த பிரமீடில் கீழ் இருக்கும் அதிகமான இளைஞர்களுக்கும் மாணவர்களுக்கும் வாய்ப்புகளை உருவாக்கி கொடுக்க வேண்டும் என்றால்,10 ஆண்டுகளில் 15 லட்சம் கோடியை நீங்கள் அந்நிய முதலீடாக இந்தியாவிற்கு கொண்டு வந்து, அதனை நிலையான மூலதன உருவாக்கத் திட்டங்களில் முதலீடு செய்து, அதன் மூலமாக தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை நீங்கள் உயர்த்த வேண்டும் என்ற இலக்கை நான் நிர்ணயம் செய்து கொடுத்தேன். அதற்குப் பிறகு, அவர்களுக்கும் நமக்கும் தொடர்பில்லை. அது முடிந்தது.

2015இல் ஜெயலலிதா அவர்கள் உலக முதலீட்டாளர்கள் சந்திப்பு நடத்தினார். 2019இல் எடப்பாடி பழனிச்சாமி உலக முதலீட்டாளர்கள் சந்திப்பு நடத்தினார். 2015இல் அவர்கள் போட்டது 90 MoU. அதில் அவர்கள் முடிவு செய்தது 2 லட்சத்து 60 ஆயிரம் கோடி ரூபாய். அத்தனை பேருக்கு MoU போட்டார்கள். 10 லட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்குவோம் என்று சொன்னார்கள்.

2019இல் எடப்பாடி அவர்கள், முதலீட்டாளர்கள் குழு மாநாடு நடத்தினார். 300 MoU கையெழுத்திட்டார். கிட்டத்தட்ட 3.5 லட்சம் கோடி. மொத்தம் 5.8 லட்சம் கோடி ரூபாய் கொண்டு வருவோம் என்று கையெழுத்திட்டார். அதற்குப்பிறகு, எடப்பாடி கோட் சூட்டு எல்லாம் போட்டுக்கொண்டு வெளிநாட்டிற்குச் சென்று, வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்கு மாடு எல்லாம் பார்த்து வந்தார். எந்தெந்த மாடு நன்றாக பால் கறக்கிறது; பண்ணை எல்லாம் சென்று பார்த்து வந்தார். அனைத்தும் சேர்த்து பார்த்தால், அம்மையார் ஜெயலலிதா தலைமையிலும் பழனிசாமி தலைமையிலும் 5.8 லட்சம் கோடி கொண்டு வருகிறோம் என்று சொல்லி, பத்தாண்டுகளில் அவர்கள் முடிவு செய்தார்கள்.

### சரித்திர சாதனை படைத்த மு.க.ஸ்டாலின்!

உண்மையாக எவ்வளவு வந்தது என்று பார்த்தால், மொத்தம் 67 ஆயிரம் கோடி ரூபாய்தான் வந்தது. அதற்குப் பிறகு, 2017இல் ஒரு தகவல் வந்தது. இந்த 5.8 லட்சம் கோடி ரூபாயில், பத்து சதவீதம் தான் வந்திருக்கிறது. அதாவது, 67 ஆயிரம் கோடி ரூபாய் கூட வரவில்லை; 58 ஆயிரம் கோடி ரூபாய்தான் வந்தது என்று சொல்லி அரசு ஆவணம் இருக்கிறது. இது பத்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியின் முதலீடுகள். நாங்கள் நிர்ணயித்த இலக்கு என்ன? பத்தாண்டுகளில் 15 லட்சம் கோடி ரூபாய்.

**திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன், நான்கரை ஆண்டு காலத்தில் அவர் கொண்டு வந்த முதலீடு 11 லட்சம் கோடி. கிட்டத்தட்ட 30 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு. எந்தெந்தத் துறைகளில் அவர் கொண்டு வந்திருக்கிறார் என்பதற்கான விரிவான டேட்டா இருக்கிறது. இப்போது சென்ற UK மற்றும் ஜெர்மனி பயணத்தில், 15,000 ரூபாய் கோடி ரூபாய் முதலீடு; 17,000 பேருக்கு வேலைவாய்ப்பு. அங்குசென்று வந்தவுடன் ஓசூரில் சென்று தொழில் துறை MoU கையெழுத்திட்டு தொடங்கி வைத்தாரே, அதனுடைய மொத்த மதிப்பு 24 ஆயிரம் கோடி ரூபாய்.**

இவர் கொண்டு வந்த முதலீடு, இந்தியாவில் மோடி செய்வது போன்று, சாலை போடுவதற்கு உள்கட்டமைப்பு மேம்படுத்துகிறோம் என்று ஒழுகும் விமான நிலையம் கட்டுவதற்கு இடிந்து விழும் பாலம் கட்டுவதற்கு மட்டும் செய்யவில்லை. அவர் செய்தது முழுவதும் உற்பத்தித்துறையில். சீனா எங்கே முதலீடு செய்கிறதோ; நிலையான மூலதனம் எங்கு உருவாக்குகிறதோ... அதற்கு சரிசமமாக செய்யும் ஒரே மாநிலம் தமிழ்நாடு.

எடப்பாடி பழனிசாமி தலைமையில் 5.8 லட்சம் கோடி ரூபாய் முதலீட்டில் 10 சதவீதம் தான் அவர்களால் மாற்ற முடிந்தது. ஆனால், மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்த 11 லட்சம் கோடி ரூபாய் முதலீட்டின் மாற்று விகிதம், முதல் உலக முதலீட்டாளர்கள் சந்திப்பு 77 சதவிகிதம்; இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் சந்திப்பில் 80 சதவீதம். முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் மட்டும் வேலை செய்யவில்லை; தன்னுடன் இருக்கும் அமைச்சர்கள் அத்தனை பேரையும் வேலை பார்க்க வைத்திருக்கிறார்.

**இன்றைக்கு எத்தனை பேர் கத்தினாலும், சேகர்பாபு அவர்களை அசைக்க முடிகிறதா... அறநிலையத்துறையை கபளீகரம் செய்வதற்கு ஆளாய் துடித்துக் கொண்டிருக்கிறது பா.ஜ.க. ஆனால் அதைக் காக்கும் தளகர்த்தாக்களில் முதல் கர்த்தாவாக இருப்பவர் அமைச்சர் அவர்கள். அது போன்று, அத்தனை அமைச்சர்களும் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கனவை நனைவாக்குவதற்கு உழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.** அதாவது, அவர்கள் உழைப்பதையும், அவர்கள் செயலையும் குறை சொல்ல முடியாது. குறை சொல்ல வேண்டும் என்றால், நான் ஆயிரம் குறை சொல்வேன். ஆனால், குறை சொல்ல முடியாததை பாராட்டும் மனது இருக்க வேண்டும். அது கட்சிக்கு அப்பாற்பட்டு இருக்க வேண்டும். அதைத்தான் இந்திய ஜனநாயக மீட்பு இயக்கம் செய்கிறது.

ஏன் என்று சொன்னால், சீனா எவ்வாறு பொருளாதரத்தில் தன்நாட்டை வளப்படுத்தி, இன்றைக்கு அமெரிக்காவிற்கு சவால் விடுகிறதோ, அந்த அளவிற்கு யோசிக்கும் திறம் கொண்ட வல்லமை பெற்ற நாடாக தமிழ்நாட்டை மாற்றிக் கொண்டிருக்கிறார் என்று சொன்னால், அங்குதான் நீங்கள் நினைக்க வேண்டும். ‘Stalin is more dangerous than Karunanidhi’ என்று சொன்னார்கள். ‘Not dangerous than Karunanidhi’. நண்பர்களே... ‘Stalin is the Hope of Tamilnadu and India also’.

**எங்கெல்லாம் ஒன்றிய அரசு மாநில சுயாட்சிக்கு எதிராகச் செயல்படுகிறதோ, அங்கெல்லாம் மு.க.ஸ்டாலின் அவர்களின் உரிமைக்குரல் ஒலிக்கிறது. உங்களுக்காக குரல் கொடுத்து, ஆட்சியே போனாலும் பரவாயில்லை என்று உறுதித் தன்மையோடு உழைக்கும் ஒரே ஒரு தலைவனாக இன்றைக்கு தமிழ்நாட்டில் இருப்பவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.**

எதிர்த்து நிற்கும் அனைத்துத் தலைவர்களையும் நான் பார்க்கிறேன். அ.தி.மு.க.வாக இருக்கட்டும்; பா.ஜ.க.வாக இருக்கட்டும்; த.வெ.க.வாக இருக்கட்டும்; நா.த.க.வாக இருக்கட்டும்; எந்தத் தலைவர்களாக இருக்கட்டும். அத்தனைத் தலைவர்களுக்கும் மேல் மக்களுக்காக இளைஞர்களுக்காக எதிர்காலத்திற்காக சிந்திக்கும் தலைவராக மு.க.ஸ்டாலின் அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார் என்பதில் எந்தவித மாற்றுக் கருத்தும் இல்லை.

உங்கள் கனவுகள் இலட்சியங்கள் சிதறடிக்கப்படும்போது உங்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாத நிலை ஏற்படும்போது, உங்களைப் பற்றி சிந்திக்கும் தலைவன் ஆட்சியில் இருக்கும்போது, உங்களுக்கு அந்தக் கவலை தேவையில்லை. அதை மறந்தீர்கள் என்று சொன்னால், அந்த வாய்ப்பை தவறவிட்டீர்கள் என்று சொன்னால், நான் நிர்ணயித்த இலக்கு 15 லட்சம் கோடி ரூபாய் முதலீடு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்னும் ஐந்து வருடத்திற்கு ஆட்சியில் இருந்தார் என்றால், 25 லட்சம் கோடி ரூபாய் முதலீட்டை உள்ளே கொண்டு வந்துவிடுவார். 25 லட்சம் கோடி உள்ளே வந்தது என்றால், உங்களது தனிநபர் மாத வருமானம் வருமானம் என்பது, டிகிரி முடித்திருந்தால் உங்களுக்கு குறைந்தது 50 ஆயிரத்திற்கு மேல் வருமானம் அனைவரும் பெறும் நிலை ஏற்படும். யாரால் ஏற்படும்? 10 ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் கொண்டுவர முடியாத முதலீட்டை, நான்கரை ஆண்டுகளில் கொண்டு வந்த மு.க. ஸ்டாலின் அவர்களால் முடியுமா? முடியாதா? முடியும்.

### பாதுகாப்பான தலைவன் கையில் தமிழ்நாடு!

இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சி 11.19 சதவீதம். இது 15 சதவீதத்திற்கு கண்டிப்பாக உயரும். அவ்வாறு உயர்ந்தால் தமிழ்நாட்டு மக்களது இளைஞர்களது எதிர்காலம் ஒரு பாதுகாப்பான தலைவனின் கையில் இருக்கிறது; உங்களைப் பாதுகாக்கும் தலைவனின் கையில் இருக்கிறது என்பது நிரூபணம் ஆகும். அதுதான் வேண்டும். நண்பர்களே... உங்களது இலட்சியத்தை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்; உங்கள் லட்சியங்களுக்கு – ஆசைகளுக்கு கனவுகளுக்கு தண்ணீர் ஊற்றி உரம் போட்டு வளர்க்கும் ஒரு தலைவனால் மட்டும்தான் உங்களது எதிர்காலம் சிறப்பாக விளங்கும்.

அதை விடுத்து, வெளிச்சத்தைப் பார்த்து பிரம்மாண்டத்தைப் பார்த்து சினிமாவைப் பார்த்து மயங்கும் விட்டில் பூச்சிகளாக நீங்கள் மாறினால், நீங்கள் பயாலஜிக்கல் வேஸ்ட்ஆக மாறும் காலம் வரும் என்பதை மனதில் கொள்ளுங்கள்.

சினிமா என்பது உங்களை மகிழ்விக்கும் ஒரு சாதனம். ஆனால், உங்கள் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் தலைவனை தேர்ந்தெடுப்பதில், இளைஞர்களே – மாணவர்களே, நீங்கள் கவனமாக செயல்படவில்லை என்று சொன்னால், அங்கு உங்களது எதிர்காலம் பயாலஜிக்கல் வேஸ்ட்ஆக மாறும். உங்கள் கனவுகளை சுமந்த எதிர்காலம், உங்கள் லட்சியத்தை மாற்ற வேண்டும் என்று சொன்னால்,நீங்கள் தேர்வு செய்யும் தலைவர், உங்கள் நலனை மனதில் கொண்டு செயல்படும் தலைவராக இளைஞர்களை மனதில் வைத்து செயல்படும் தலைவராக அனைத்து மக்களையும் அரவணைத்துச் செல்லும் தலைவராக இருக்க வேண்டும் என்பதில், இளைய சமுதாயம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எனவே, இலட்சியம் கொண்ட யாரையும், யாரும் அடிமைப்படுத்த முடியாது. நான் சொல்வதை திருப்பி சொல்கிறீர்களா...‘நான் உயர்ந்த இலட்சியம் கொண்டவள் / லட்சியம் கொண்டவன்; எனது லட்சியம் உயர்வானது; நான் லட்சியம் கொண்டதனால், என்னை யாரும் அடிமைப்படுத்த முடியாது; சினிமா என்னை அடிமைப்படுத்தாது; சோசியல் மீடியா அடிமைப்படுத்தாது; இன்ஸ்டாகிராம் என்னை அடிமைப்படுத்தாது; சினிமா கதாநாயகர்கள் என்னை அடிமைப்படுத்த முடியாது; நண்பர்கள் அடிமைப்படுத்த முடியாது; காதலே என்னை அடிமைப்படுத்த முடியாது; எனக்கு லட்சியம் இருக்கிறது; அந்த லட்சியத்தை நிறைவேற்றுவதற்கு உறுதி கொண்டு உழைப்பேன்; என் கனவை நனவாக்கும் தலைவனையே தேர்ந்தெடுப்பேன்’.

இவ்வாறு அவர் உரையாற்றினார்.